# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழ்த்தொண்டு சிறப்பு தொடர்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழ்த்தொண்டு சிறப்பு தொடர்கள்

## ஜியார்ஜ் யுக்ளோ போப்

| | | |
|---|---|---|
| ஊர் | - | எட்வர்டு தீவு (பிரான்ஸ்) |
| பெற்றோர் | - | ஜான்போப், கெதரின் யுளாப் |
| காலம் | - | 1820 முதல் 11 - 02 -1908 வரை |
| ஆசிரியர் | - | இராமானுஜ கவிராயர் (தமிழ் கற்பித்தவர்) |

**சிறப்புகள்:**

- ❖ போப்பின் தமையனார் ஹென்றி தமிழகத்தில் கிறித்துவ மதத்தை பரப்பும் குருவாக பணியாற்றினார்.
- ❖ 19 வயதில் (1939 ல்) தமிழகத்தில் சமயப்பணி ஆற்ற தேர்ந்தெடுக்கப்பட்டவர் - ஜி.யு. போப்.
- ❖ பாய்மரக்கப்பலில் சென்னை வர 8 மாதங்கள் ஆயின. அதில் அவர் தமிழையும், வடமொழியையும் கற்றவர் - ஜி.யு. போப்.
- ❖ முதலில் சென்னை சாந்தோம் பகுதியிலும் பின்னர் திருநெல்வேலி சாயர்புரத்திலும் (1842 - 1849) சமயப்பணி ஆற்றியவர் - ஜி.யு. போப்.
- ❖ சாயர்புரத்தில் பள்ளிகளை நிறுவியவர் - ஜி.யு. போப்.
- ❖ 1850 ல் இங்கிலாந்து சென்று திருமணம் செய்து கொண்டார் பின்தன் மனைவியுடன் வந்து தஞ்சாவூரில் சமயப்பணி ஆற்றியவர் - ஜி.யு. போப்.
- ❖ இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு போன்ற ஏடுகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியவர் - ஜி.யு. போப்.
- ❖ இக்கட்டுரைகளில் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ்ப்புலவர் வரலாறும் இடம்பெற்றிருந்தன.
- ❖ நீதி நூல்களில் இருந்து பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றில் 600 செய்யுள்களை எடுத்து தமிழ் செய்யுட்கலம்பகம் என்னும் நூலை தொகுத்ததோடு அதற்கு விளக்கமும் தந்தவர் - ஜி.யு. போப்.
- ❖ தமிழ்செய்யுட்கலம்பகம் 600 பாடல்களை கொண்டது.
- ❖ தமிழ் - ஆங்கிலம், ஆங்கில - தமிழ் அகராதிகளை வெளியிட்டார்.
- ❖ 1858 ல் உதகமண்டலம் சென்று பள்ளி ஒன்றை நிறுவினார்.
- ❖ 1885 - 1908 வரை தயாகம் சென்று இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு ஆசிரியராக பணியாற்றினார்.
- ❖ திருக்குறளை 40 ஆண்டுகள் படித்த பின்னர் 1886ல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- ❖ 1900 ல் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் -ஜி.யு. போப்.

- ❖ புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தவர் -ஜி.யு. போப்.
- ❖ தமது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று எழுதச்சொன்னவர் - ஜி.யு. போப்.
- ❖ தருக்கம் என்பதன் பொருள் -அறிவாய்வு.
- ❖ தத்துவம் என்பதன் பொருள் - மெய்யறிவு.

## வீரமாமுனிவர்

| | |
|---|---|
| இயற்பெயர் | - கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி |
| ஊர் | - காஸ்திக்கிளியோன் இத்தாலி |
| பெற்றோர் | - கொண்டல் போபெஸ்கி, எலிசபெத் |
| காலம் | - 8 - 11 - 1680 - 1747 |
| இயற்றிய நூல்கள் | - ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, திருக்காவலூர் கலம்பகம், தொன்னூல் விளக்கம், தேம்பாவணி, கித்தேரிஅம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் |

**சிறப்புகள்:**

- ❖ இவருக்கு தமிழ் கற்பித்தவர் மதுரை சுப்பிரதீபக் கவிராயர் ஆவார்.
- ❖ வீரமாமுனிவர் திருச்சி சந்தா சாகிப்பிடம் திவாணாக பணிபுரிந்தவர்.
- ❖ சதுரகராதியில் வீரமாமுனிவர் 96 வகை சிற்றிலக்கியங்களை பற்றி கூறியுள்ளார்.
- ❖ கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றியவர் - வீரமாமுனிவர்.
- ❖ கான்ஸ்டாண்டின் என்ற இத்தாலிய சொல்லுக்கு அஞ்சாதவன் என்று பொருள். எனவே தம் பெயரை தைரிய நாதன் (அ) தைரியநாதசாமி என இவர் மாற்றிக் கொண்டார்.
- ❖ தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் திருத்தி எழுத்து சீர்திருத்தம் மேற்கொண்டவர் வீரமாமுனிவர் ஆவார்.
- ❖ யோசேப்பு அல்லது சூசை அல்லது ஜோசப் என்ற பெயரை வளன் என்று தமிழ்ப்படுத்தியவர் வீரமாமுனிவர்.
- ❖ பரமார்த்த குரு கதை முதல் நகைச்சுவை (ஏளன) நூல் ஆகும்.
- ❖ இவர் 1710 ல் தமிழகம் வந்து 37 ஆண்டுகள் சமயப்பணியும், தமிழ்பணியும் புரிந்து 1747 ல் அம்பலக்காடு என்ற இடத்தில் இயற்கை எய்தினார்.
- ❖ இவர் இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மொழிகளை அறிந்தவர்.